பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 08 2024 **FRIDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

2. ஜம்மு காஷ்மீரில் சட்டப்பேரவைத் தேர்தலை நடத்துவதில் தேர்தல் ஆணையம் உறுதியுடன் உள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் கூறியுள்ளார்.

3. பங்களாதேஷை ஒட்டியுள்ள எல்லைப்பகுதியில் தற்போது நிலவிவரும் சூழ்நிலையை கண்காணிப்பதற்கென குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

4. தமிழகத்தில் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் 28 மின்னணு சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. இத்தாலியில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - அர்ஜுன் கதே இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

கடந்த மாதம் 22-ஆம் தேதி தொடங்கிய இந்த கூட்டத்தொடர், வரும் திங்கட்கிழமை வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது முன்கூட்டியே முடிவடைந்துள்ளது.

இந்த கூட்டத்தொடரை பொறுத்தவரை மக்களவை 115 மணிநேரம் செயல்பட்டதாக அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா கூறினார்.

நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ததை சுட்டிக்காட்டிய அவர், அதுதொடர்பான விவாதம் 27 மணிநேரம் 19 நிமிடம் நடைபெற்றதாக கூறினார்.

12 மசோதாக்கள் இந்த கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டதாகவும், இதில் நான்கு நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.

மாநிலங்களவையை பொறுத்தவரை 90 மணிநேரம் செயல்பட்டதாக அவைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

பட்ஜெட் மீதான விவாதம் 22 மணிநேரம் நடைபெற்றதாகவும், அடுத்தக்கூட்டத்தொடர் மேலும் ஆக்கப்பூர்வமாக அமையும் என்று நம்புவதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

இதற்கிடையே, நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் முடிவடைந்த நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு ராஜ்நாத் சிங், திரு கிரண் ரிஜிஜு,

எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லாவை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினர்.

<<<<<<>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இது மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் கடந்த மாதம் ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் உரையிலும் பிரதமர் இதை குறிப்பிட்டு பேசினார்.

<<<<<<>>>>

மனநலம் சார்ந்த சுகாதார சேவைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இதற்கென தொலைபேசி வழி சேவைத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

இந்த தொலைபேசிவழி சேவை வாயிலாக 11 லட்சத்திற்கும் மேற்பட்ட அழைப்புகள் கையாளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். முதுநிலை மனநல சிறப்புப்பிரிவு படிப்புகளுக்கான எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். 22 புதிய எயிம்ஸ் மருத்துவமனைகளில் மனநல சேவை வழங்கப்படுவதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் 28 மின்னணு சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் இந்த மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் மாவட்ட நீதிமன்றங்களில் ஆயிரத்து 72 மின்னணு சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்

<<<<<<>>>>

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதாவிற்கு இஸ்லாமியர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், இன்று இஸ்லாமிய அமைப்புகளின் பிரதிநிதிகள் தம்மை சந்தித்து இதனை தெரிவித்தாக கூறினார்.

வக்ஃப் வாரியம் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் வைத்துள்ளதாகவும், அதன் மீது மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>

பங்களாதேஷை ஒட்டியுள்ள எல்லைப்பகுதியில் தற்போது நிலவிவரும் சூழ்நிலையை கண்காணிப்பதற்கென குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

எல்லை பாதுகாப்புப் படையின் கூடுதல் தலைமை இயக்குனர் தலைமையில் இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை இந்த குழு மேற்கொள்ளும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>

ஜம்மு காஷ்மீரில் சட்டப்பேரவைத் தேர்தலை நடத்துவதில் தேர்தல் ஆணையம் உறுதியுடன் உள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் கூறியுள்ளார்.

இன்று ஜம்முவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலை நடத்த வேண்டும் என்று கோரியிருப்பதாக கூறினார்.

இதுதொடர்பாக, தலைமைச்செயலர் மற்றும் காவல்துறை தலைவருடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக நேற்றும், இன்றும் ஆய்வு நடத்தப்பட்டதாக அவர் கூறினார். நாளையும் இதுதொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடைபெறவுள்ளதாக திரு ராஜீவ்குமார் தெரிவித்தார்.

<<<<<<>>>>

முதுநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு அட்டவணையை மாற்றியமைக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட மனுவினை உச்சநீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு தேர்வு அட்டவணையை மாற்றியமைக்க விரும்பவில்லை என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

கோரக்பூரில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு அளித்துவரும் ஆதரவு காரணமாக சர்வதேச போட்டிகளில் இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

பாரிஸ் ஒலிம்பிக் ஈட்டி எறிதல் போட்டியில் நீரஜ் சோப்ரா வெள்ளிப்பதக்கம் வென்றதையும், ஹாக்கி அணி வெண்கலப்பதக்கம் வென்றதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

<<<<<<>>>>

மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின்கீழ், பீடி, சுண்ணாம்புக்கல், டோலமைட் சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் சினிமா தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஒன்றாம் வகுப்பு தொடங்கி, தொழில்முறை படிப்புகள் வரை பயில்வதற்கு உதவித்தொகை வழங்கப்படுவதாக தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான தொழிலாளர் நல ஆணையர் திரு செபாஸ்டின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேசிய கல்வி உதவித்தொகை வலைதளத்தில் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒன்று முதல் 10-ஆம் வகுப்பு வரை உதவித்தொகை பெறுவதற்கு வரும் 31-ஆம் தேதியும், உயர்கல்விக்கான உதவித்தொகைக்கு அக்டோபர் மாதம் 31-ஆம் தேதியும் கடைசி நாளாகும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே மீண்டும் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அமெரிக்கா, எகிப்து மற்றும் கத்தார் நாடுகள் வலியுறுத்தியுள்ளன இதுதொடர்பாக மூன்று நாடுகளும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. காஸா பிரச்சினைக்கு தீர்வுகாண இது அவசியமாகிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இத்தாலியில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - அர்ஜுன் கதே இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

------------

**Bonn** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-4 என்ற செட் கணக்கில், செர்பியாவின் **Metej Sabanov - Ivan Sabanov** இணையை வென்றது.

-------

பாரிஸ் ஒலிம்பிக் ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவை பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

ஒலிம்பிக் போட்டி நிறைவு விழா அணிவகுப்பில் இந்தியாவின் தேசியக்கொடியை ஹாக்கி அணியின் கோல் கீப்பர் **Sreejesh**–ம், மனுபாக்கரும் ஏந்தி செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>